செ. கு. எண்: 214 நாள் : 20.11.2014

## <u>மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர்.காமராஜ் அவர்களின் அறிக்கை – 20.11.2014</u>

பா.ம.க. நிறுவனர் திரு. ராமதாசு அவர்கள் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை கொள்முதல் செய்வதில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதாகக் கூறி, இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்று வைத்துக்கொண்டால், பருப்பு கொள்முதலில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மூவாயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறியுள்ளார். பருப்பு கொள்முதலில் எந்த இழப்பும் அரசுக்கு ஏற்படவில்லை என்பதும், திறந்த வெளி ஒப்பந்தம் வழியே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் திரு. ராமதாசு அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதையே இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. எனவேதான், இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்று வைத்துக்கொண்டால், பருப்பு கொள்முதலில் மட்டும் கடந்த மூன்றரை ஆண்டுகளில், அரசுக்கு மூவாயிரம் கோடிக்கும் அதிகமாக இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கூறியுள்ளார். ஹேஷியங்களின் அடிப்படையில், அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என உண்மையில்லாதவற்றை ஒரு நாலாந்தரப் பத்திரிக்கை வெளியிடலாம். ஆனால், ஒரு அரசியல் கட்சி நிறுவனர், இவ்வாறான அறிக்கையை வெளியிட்டு அரசுக்கு மக்கள் மத்தியில் களங்கம் ஏற்படுத்த முயல்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது ஆகும். இந்த அறிக்கை முழுவதும் கற்பனையாகக் கூறப்பட்டவை என்பதும், திரு. ராமதாசு அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. எனவேதான் அறிக்கையில், “கூறப்படுகிறது”, “குற்றச்சாட்டுகள் உண்மை என்று வைத்துக் கொண்டால்'', ‘‘குற்றச்சாட்டுகளில் உண்மையிருந்தால்'' என்று தெரிவித்திருக்கிறதோடு அல்லாமல், உறுதியாகக் குற்றம் சாட்டி எதையும் தெரிவிக்கவில்லை. இவ்வாறு கூறுவதால், மானநஷ்ட வழக்கு தொடுக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்துக் கொண்டு, மக்களைக் குழப்பும் விதமாக இதுபோன்ற ஒரு அறிக்கையினை அவர் வெளியிட்டுள்ளார். இருப்பினும், இந்த அறிக்கை அரசியல் உள்நோக்கத்துடன், அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், அவர் மீது மானநஷ்ட வழக்கு தொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பருப்பு வகைகள் வழங்குவதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வெளிப்படையான ஒப்பந்த முறைப்படியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்யப்படுவதால் எந்தவித முறைகேடுகளும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும், இது தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று, உயர்நீதிமன்றமே அவ்வப்போது உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், திரு. ராமதாசு முறைகேடு இருக்குமோ என்று சொல்வது, உயர்நீதிமன்றத்தையே அவமதிப்பது ஆகும். தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி (The Tamil Nadu Transparency in Tenders Act), ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, முடிவு செய்யப்படுவது என்பது, மருத்துவக் கல்லூரிகளுக்கு இவரது மகன் அனுமதி வழங்கியது போன்றது அல்ல என்பதை திரு. ராமதாசு அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. ராமதாசு தனது அறிக்கையில், குற்றச்சாட்டுகள் உண்மை என்று வைத்துக் கொண்டால், பருப்பு கொள்முதலில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் அரசுக்கு மூவாயிரம் கோடிக்கும் அதிகமாக இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் எனக் கூறியுள்ளார். கடந்த 2011–ஆம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற அஇஅதிமுக அரசு இதுவரையில் 4450 கோடி ரூபாய் அளவுக்கு துவரம் பருப்பு, கனடா மஞ்சள் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை கொள்முதல் செய்துள்ளது. இதில், மூன்றாயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக இழப்பு என்றால், சராசரியாக துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவை கிலோ ஒன்றுக்கு 17 ரூபாய் என்ற அளவில் கொள்முதலுக்குக் கிடைக்கும் என்பதாகும். இது சாத்தியமானதா என்பதை திரு. ராமதாசு தான் விளக்க வேண்டும். கூட்டணிக் கணக்கு வழக்குகளில் சிந்திப்பதில் ஒரு சிறிதளவாவது, இந்தக் கணக்கு பற்றி திரு. ராமதாசு சிந்தித்திருந்தால், இது போன்ற ஒரு அபத்தமான அறிக்கையை வெளியிட்டிருக்கமாட்டார்.

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்கான துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றிற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இன்று வரை ஒவ்வொரு மாதமும் கோரப்பட்டு வருகிறது. பருப்பு வகை உள்ளிட்ட பல்வேறு விவசாயப் பொருட்களின் விலை அவ்வப்போது கிடைக்கப்பெறும் பொருட்களின் அளவு, தேவை, அதாவது Supply and Demand அடிப்படையிலேயே இருக்கும் என்பது அடிப்படை பொருளாதார விதி. எனவேதான், உதாரணத்திற்கு, தக்காளியை எடுத்துக் கொண்டால், அதிக அளவு விளைச்சல் உள்ள நேரத்தில், சில்லரை விலையில் கிலோ 4 ரூபாய்க்கும் கிடைக்கும்; விளைச்சல் குறைவான நேரத்தில் கிலோ 40 ரூபாய்க்கும் கூட விற்கப்படும். இதைப்போன்ற விலை அதிர்வுகளைத் தவிர்க்கவும், தேவையான அளவு பொருட்கள் கிடைக்காத நிலையைத் தவிர்க்கவும், அரசு எந்திரம் ஆனாலும், எந்தவொரு தனியார் நிறுவனமானாலும், ஆண்டு முழுவதற்குமான கொள்முதல் விலை ஒப்பந்தங்களைத்தான் ஏற்படுத்தும். இதுதான் சரியான நடைமுறையும் ஆகும். அந்த அடிப்படையில்தான், கடந்த ஏப்ரல் 2013–ஆம் ஆண்டு சுமார் ஓராண்டு தேவைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன.

இந்த நடைமுறைதான் சரியானது என்பதை தன்னை அறியாமலேயே, திரு. ராமதாசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கடந்த ஆகஸ்டு மாதத்தில் உளுத்தம் பருப்பு டன் ஒன்று 70 ஆயிரம் ரூபாய்க்கும், லெண்டில் பருப்பு டன் ஒன்றுக்கு 52 ஆயிரம் ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், அதன்பின் செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு இது முறையே 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 54 ஆயிரம் ரூபாய் என்ற விலையில் கொள்முதல் செய்யப்பட்டன என்று கூறியுள்ளார். கடைசியாக கடந்த அக்டோபர் மாதம் உளுத்தம் பருப்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 62 ஆயிரத்து 209 என்றும், லெண்டில் டன் ஒன்றுக்கு ரூபாய் 52 ஆயிரத்து 140 என்ற விலைக்கும் தான் வாங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் கொள்முதல் செய்யும்போது அந்த மாதத்தில் கிடைக்கப்பெறும் பருப்பு வகைகளின் அளவு மற்றும் அவற்றின் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இது போன்ற விலை மாற்றங்கள் இருக்கும் என்பதை திரு. ராமதாசே ஒப்புக்கொண்டுள்ளார். எனவேதான், 2013–ஆம் ஆண்டு ஒரு ஆண்டுக்கான ஒப்பந்த முறையை கடைப்பிடிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முடிவு செய்தது.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 10 மாதங்கள் கழித்து, 2014–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில்தான் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன என்றும், ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, 10 மாதங்களுக்குப் பிறகும், எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் திரு. ராமதாசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். 15.4.2013 அன்று ஒரு லட்சம் மெட்ரிக் டன் கனடியன் எல்லோ லெண்டில், 50 ஆயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பு மற்றும் ஒரு லட்சம் மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பு ஆகியவை வாங்கிட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 15.3.2013 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, 15.4.2013 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டன. இதில் 4 நிறுவனங்கள் பங்கேற்றன. அதில், PEC Limited, புது டெல்லி, ஒப்பந்தம் கோரப்பட்ட மொத்த அளவில் 10 சதவிகிதம் அளவிற்காவது Grading capacity இல்லை என்பதாலும், அரவை செய்ய, சொந்தமாகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஆலை வசதி இல்லை என்ற காரணத்தாலும், ஒப்பந்த விதிமுறைகளை இந்த நிறுவனம் பூர்த்தி செய்யவில்லை. எனவே, PEC Limited, புது டெல்லி தகுதிநீக்கம் செய்யப்பட்டது.

Appu Foods, கடலூர் என்னும் நிறுவனம் ஒப்பந்த விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளதுபோல், பிணை வைப்புத் தொகை இணைக்கப்படாத காரணத்தாலும், அரசு நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகித்த முன் அனுபவம் இல்லாத காரணத்தாலும், ஒப்பந்த விதிமுறைகளில் குறிப்பிட்ட வியாபார விற்பனைத் தொகை (Turn over) இல்லாத காரணத்தாலும், முந்தைய மூன்றாண்டுகளுக்கு தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள் தாக்கல் செய்யப்படாத காரணத்தாலும், அரவைத் திறன் இல்லாத காரணத்தாலும் தகுதிநீக்கம் செய்யப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஒரு நிறுவனம் குறித்து சில புகார்கள் பெறப்பட்டதன் அடிப்படையில், அது குறித்து விசாரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையில், 6.1.2014 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் திருவாளர்கள் மீனாட்சி டிரேடர்ஸ் தொடர்ந்த நீதிப் பேராணை மனு எண்.264 மற்றும் 265/2014ல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், 13.1.2014 அன்று விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டன. இரண்டு நிறுவனங்களும் அதிக விலை கோரியிருந்ததால், 13.1.2014 அன்று நடைபெற்ற குழுமக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்க முடிவு எடுக்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் மனு அளித்த காரணத்தால், இந்த நிறுவனங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்த 7.2.2014 அன்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டதால் உடனடியாக பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின், 27.8.2014 அன்று மிகக் குறைந்த விலைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்துடன் உயர்நீதிமன்ற உத்தரவின்படி பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில், 12.11.2014 மற்றும் 18.11.2014 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுமக் கூட்டங்களில் இப்பொருள் விவாதிக்கப்பட்டு அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ராமதாசு, NAFED நிறுவனம் உளுத்தம் பருப்பை டன் 43 ஆயிரம் ரூபாய் என்ற விலையிலும், மசூர் பருப்பை 29 ஆயிரம் ரூபாய் என்ற விலையிலும் கொள்முதல் செய்கிறது எனத் தெரிவித்துள்ளது, உண்மைக்கு மாறானதாகும். NAFED நிறுவனம் உளுத்தம் பருப்பைக் கொள்முதல் செய்வதில்லை. தோல் நீக்கப்படாத முழு உளுந்தைத்தான்

கொள்முதல் செய்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் அவ்வாறு கொள்முதல் செய்ய வேண்டுமென்றால், நமக்குத் தேவையான உளுத்தம் பருப்புக்கான முழு உளுந்தை மகாராஷ்ட்ரா மற்றும் கர்நாடகா ஆகிய பல்வேறு மாநிலங்களில்தான் கொள்முதல் செய்ய இயலும். அதனைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான போக்குவரத்துக் கட்டணம், தோல் நீக்கி பிரித்தெடுப்பதற்கான அரவை செலவு, ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி போன்ற இதர செலவினங்கள், அரவைக்குப் பின் கிடைக்கும் கண்டுமுதல் (out turn) ஆகியவற்றைக் கணக்கிட்டால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் பெறப்படும் பருப்புகளின் விலையைவிட அதிகமாகத்தான் இருக்கும்.

The Tamil Nadu Transparency in Tenders Act சட்டத்தின்படி, விலைப் புள்ளிகள் கோரப்பட்டு, அந்த அடிப்படையிலேயே, நியாயமான விலைக்கு தரமான பொருட்களை வழங்கும் நிறுவனத்திற்குத்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் ஆணைகள் வழங்கப்படுகிறது. எனவே, கற்பனைகளின் அடிப்படையில், பொய்யான புகார்களைத் தெரிவித்து, அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடலாம் என்று நினைப்பதை திரு. ராமதாசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**ஆர்.காமராஜ்**
உணவுத் துறை அமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**